# கோலாலம்பூர் பாதுகாப்பான இடமே

## டத்தோ பண்டார் விளக்கம்

கோலாலம்பூர், ஆக. 26-

அண்மையில் தலைநகரிலுள்ள ஜாலான் மஸ்ஜிட் இந்தியாவில் மண் உள்வாங்கியச் சம்பவம் நிகழ்ந்ததைத் தொடர்ந்து அப்பகுதி பாதுகாப்பானதல்ல எனக் கூறப்பட்டு வரும் குற்றச்சாட்டை கோலாலம்பூர் டத்தோ பண்டார் டத்தோஸ்ரீ டாக்டர் மைமுனா முகமட் ஷாரிப் நேற்று மறுத்தார்.

அப்பகுதி குறித்து விரிவான முறையில் ஆய்வு செய்வதற்கு சிறப்புக் குழு ஒன்றும் அமைக்கப்பட்டுள்ளதாக அவர் சொன்னார்.

இக்குழுவில் கோலாலம்பூர் மாநகர் மன்றம், போலீஸ், மலேசிய கனிம - புவி அறிவியல் துறை, பொதுப்பணி இலாகா ஆகியோர் இடம் பெற்றிருப்பர் என்றார்.

இவ்விவகாரம் குறித்து தாம் சற்று நேரத்திற்கு முன்பு சம்பந்தப்பட்ட தரப்பினருடன் கூட்டம் ஒன்றை நடத்தியதாகக் கூறிய அவர், அவர்கள் கொடுத்த தகவலைத் தொடர்ந்து ஜாலான் மஸ்ஜிட் இந்தியா இன்னும் பாதுகாப்பான பகுதி என தம்மால் உறுதிப்படுத்த முடியும் எனவும் அவர் தெரிவித்தார்.

எனவே, பொதுமக்கள் கோலாலம்பூருக்கு வருகை புரிவது பாதுகாப்பானதே எனவும் அவர் சொன்னார்.



மீட்புப் படையில் நிபுணத்துவம் பெற்ற அமைப்பு, மலேசிய கனிம - புவி அறிவியல் துறை ஆகியோருடன் இணைந்து ஜாலான் மஸ்ஜிட் இந்தியா உட்பட கோலாலம்பூர் முழுவதும் உள்ள இடங்களை பாதுகாப்பான இடமாக உறுதிப்படுத்துமாறு கோலாலம்பூர் மாநகர் மன்றம் கேட்டுக் கொண்டுள்ளதாகவும் அவர் சொன்னார்.

நேற்று ஜாலான் மஸ்ஜிட் இந்தியாவில் மண் உள்வாங்கியச் சம்பவம் நிகழ்ந்த இடத்திற்கு வருகை தந்த பின்னர் அங்கு நடைபெற்ற செய்தியாளர் கூட்டத்தில் அவர் இவ்வாறு கூறினார்.

கோலாலம்பூர் பாதுகாப்பானது அல்ல என சமூகவலைத்தளங்களில் பரவலாகப் பகிரப்பட்டு வரும் காணொளி குறித்து கருத்துரைத்த அவர், இதற்கு அவர்கள் சரியான ஆதாரங்களைச் சமர்ப்பிக்க வேண்டும் என்றார்.

பல ஆண்டுகளுக்கு முன்பு உருவாக்கப்பட்ட கோலாலம்பூர் இன்று வரை பாதுகாப்பானதே எனவும் அவர் சொன்னார்.

ஒருவேளை கோலாலம்பூர் பாதுகாப்பானது இல்லை எனக் கூறினால், அதற்கான ஆதாரம் உட்பட அது மீதான ஆய்வு குறித்தும் சமர்ப்பிக் கப்பட வேண்டும் என்றார்.